*பிரசார்பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*23 09 2026 WEDNESDAY 6 30 PM*
*வணக்கம் - மாநிலச்செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

*1) அரசியல் சாசனத்திற்கு உட்பட்டே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.*

*2) மைபாரத் இணையதளத்தில் பதிவு செய்துள்ள இளையோரின் எண்ணிக்கை மூன்று கோடியை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது*

*3) தமிழகத்தில் தடையின்றி மின்சாரம் வழங்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் அறிவுறுத்தியுள்ளார்.*

*4) தமிழக பிஜேபி பொறுப்பாளராக திரு. ராம் மாதவ் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*5) ஆசிய விளையாட்டு பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.*

*>>>>>><<<<<<*

*அரசியல் சாசனத்திற்கு உட்பட்டே அனைத்து முடிவுகளும் மேற்கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், எந்தவொரு பிரச்சினை தொடர்பாக விவாதங்கள் நடைபெறுவதும், மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுவதும் இயல்பான ஒன்று என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இருப்பினும், இறுதி முடிவு ஒருமித்த கருத்தின் அடிப்படையில் உரிய நெறிமுறைகளுக்கு உட்பட்டே எடுக்கப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.*

*வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக தேர்தல் ஆணையர்கள் தெரிவித்த பரிந்துரைகள், அதன் நடைமுறையை மேம்படுத்துவதற்கானது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*தலைமை தேர்தல் ஆணையருக்கும், தேர்தல் ஆணையர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் உள்ளதாக நாளிதழ் ஒன்றில் வெளியான செய்தியை அடுத்து, தேர்தல் ஆணையம் இந்த விளக்கத்தை அளித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*நாடுமுழுவதும் கடந்த 12 ஆண்டுகளில் சாலை ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து கட்டமைப்பு வசதிகள் பெரிய அளவில் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் சுற்றுலா தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*சுற்றுலா தலங்களில் கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாகவும் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.*

*>>>>>><<<<<<*

*மைபாரத் இணையதளத்தில் பதிவு செய்துள்ள இளையோரின் எண்ணிக்கை 3 கோடியை தாண்டியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*கடந்த 2023ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இணையதளத்தில் பதிவு செய்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இளையோர், 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயிற்சி திட்டங்களில் பங்கேற்றுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>><<<<<<*

*தமிழகத்தில் தடையின்றி மின்சாரம் வழங்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் அறிவுறுத்தியுள்ளார்.*

*சென்னையில் உள்ள மின்வாரிய தலைமையகத்தில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.*

*மின் சேமிப்பு மற்றும் மின் தேவையை சீராக நிர்வகிப்பதற்கான கொள்கையை விரைவில் அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் வலியுறுத்தினார்.*

*மின்துறையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகத்தை உருவாக்க தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. விஜய் அறிவுறுத்தினார்.*

*>>>>>><<<<<<*

*தமிழகத்தில் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் 9 ஆயிரம் பேராசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் கூறியுள்ளார்.*

*திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் - விஸ்வநாதன் 48 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*சமூகநீதி துறையின் கீழ் செயல்படும் அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு ஏதுவாக 24 மணிநேரமும் செயல்படும் கட்டுப்பாட்டு அறையை, அத்துறைக்கான அமைச்சர் திரு. வன்னி அரசு இன்று திறந்து வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து மாணவர்களுடன் அமைச்சர் கலந்துரையாடியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள் 73388 01456 என்ற வாட்ஸ்ஆப் எண்ணில் தொடர்பு கொண்டு புகார்களை தெரிவிக்கலாம் என்று அதில் கூறப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*தமிழக பிஜேபி பொறுப்பாளராக திரு. ராம் மாதவ் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*இணைப் பொறுப்பாளர்களாக திரு நிர்மல் குமார் சுரானா-வும், திருமதி டி கே அருணாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.*

*இவர்களுக்கு சமூக வலைதளத்தில் வாழ்த்து தெரிவித்துள்ள மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், இவர்களின் அனுபவம் பிஜேபியை வலுப்படுத்தவும், மக்கள் சேவையை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவும் பெரும் துணையாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த த.வெ.க. அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.*

*இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், த.வெ.க அரசின் அலட்சியப் போக்கு காரணமாக டெங்கு பாதிப்பு அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*மாநிலம் முழுவதும் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை செய்திக்குறிப்பு வெளியிட்டுள்ளதையும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் பங்கேற்காதது*

கண்டனத்திற்குரியது என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலம் இன்றிரவு ஆந்திரா - ஒடிசா இடையே கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>><<<<<<

<u>மாவட்டச் செய்திகள்</u>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கல்வி மீளாய்வுக் கூட்டம், ஆட்சியர் திருமதி. சினேகா தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

நாமக்கல்லில் புதிய ஆதார் சேவை மையத்தை அம்மாவட்ட ஆட்சியர் திரு. மதுபாலன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், அச்சங்குளம் மருந்துவாழ் மலையில் ஒருங்கிணைந்த மனநல மையத்தினை ஆட்சியர் திரு. பிரதாப் இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம், காவல்துறை கண்காணிப்பாளர் திரு. Akshai Anil Vahre தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

மதுரை மாவட்டம், மாங்குளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 41 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>>><<<<<<

பெரம்பலூர் அருகே உரிமம் இல்லாத நாட்டுத் துப்பாக்கி வைத்திருந்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய விளையாட்டு பேட்மிண்டன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

கபடி போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் ஹாக்கி லீக் சுற்று போட்டியில் இந்தியா 20-1 என்ற கோல்கணக்கில் தாய்லாந்தை வென்றது.

மகளிர் Wushu போட்டியில் Naorem Roshibina Devi இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளார்.

Squash போட்டியில் Abhey Singh, Veer Chotrani மற்றும் Tanvi Khanna காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இப்போட்டிகளில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், 5 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் 13வது இடத்தில் உள்ளது.

ஆசிய விளையாட்டு பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய அணிக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு. விஜய், இந்த அணியில் இடம்பெற்றுள்ள தமிழகத்தைச் சேர்ந்த ஹரிஹரனுக்கு 30 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

*>>>>>><<<<<<<*

***ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி இளையோர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.***

***ராஜ்கோட்டில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்று முதலில் பேட் செய்த ஆஸ்திரேலியா 49 புள்ளி 3 ஓவரில் 254 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.***

***Mohit Ulva மற்றும் Manal Chauhan தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.***

***255 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா 41 புள்ளி இரண்டு ஓவரில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.***

***மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரை, அனைத்து ஆட்டங்களிலும் வெற்றிபெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.***

*>>>>>>END<<<<<<<*